# பதினெண் சித்தர்களும் அட்டமா சித்திகளும்

**முனைவர் ப . முத்துக்குமாரவடிவேல் ,**

**இணைப்பேராசிரியர் , தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)**

**தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி , பேரூர் – 10**

p.muthukumaravadivel@gmail.com

**58**

**ஆய்வுச்சுருக்கம்**

ஞான நிலையில் உயர்ந்து, அறிவாண்மையால் ஆற்றல் பெற்று அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள். மருத்துவம், கல்வி, வானியல், சோதிடம், யோகம் போன்ற துறைகளின் மூலமாக மனிதகுல மேம்பாட்டிற்கு வித்திட்ட சித்தர்களின் சமுதாயத் தொண்டும் அட்டமா சித்திகளும் இக்கட்டுரையில் விளக்கப்படவுள்ளன.

**சித்தர் யார் ?**

**"பித்தந் தெளிந்தவன் பக்தன்**
**சித்தந் தெளிந்தவன் சித்தன்"**

மனம், சித்தம், புத்தி, அகம்காரம் என்ற நான்கில் சித்தம் தெளிந்தால் மற்ற மூன்றும் தானே அடங்கி சித்தனாக ஒருவருக்குத் தகுதியுள்ளது. சித்தர்கள் எல்லாக் காலங்களிலும் வாழ்ந்துள்ளார்கள் , என்றாலும் சிவபெருமானிடம் நேரிடையாக ஸ்பரிச தீட்சை வாங்கிய பதினெட்டுப் பேரும் சிறப்புப் பெற்றவர்கள். மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளைத் தன்வசப்படுத்தியவர்களும் கைகளில் இருந்து விபூதி எடுப்பவர்களும் சூமந்திரகாளி சொல்லிப் பொருட்களை எடுத்துக் கொடுப்பவர்களும் மட்டுமே சித்தர் அல்லர் . ஜீவனை முக்திக்குக் கொண்டு செல்வரே சித்தர் என்றும் சித்தன் என்றும்,

**"சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்"**

**திருமந். தந்-1. பா-125**

திருமந்திரம் கூறுகிறது. மேலும், சிவனை சீவனுக்குள் கண்டவனே சித்தன் என்று

**"தேகதிக் கெட்டத சிறசுக மெய்வாழ்வே**
**சாகாத சகதிக்கலை"**

சுத்த சக்தி சைதன்யத்தில் வாழும் பரம சுத்த ஆத்மாக்களே சித்த யோகிகள் ஆவார்கள் என்றும்

**"மறவாமற் காணும் வகையுணர் வார்க்கு**
**இறவாதி ருத்தலு மாம்"**

**- ஔவைக் குறள்.மெய்யகம்.குறள்.9**

**"சுத்தமோ டொன்றி மனமும் இறந்தக்கால்**
**முற்றும் அழியா துடம்பு"**

**மேலது.கண்ணாடி.குறள்.10**

என்ற மேற்கான பாடலில் என்றும் மறவாத ஈசன் நிலையில் நிலைத்து இருந்து இறவாமல் இருப்பவனும் சுத்தம் என்ற அமரத்தன்மையில் மன்மனம் இறந்த நிலையில் (மனோநாசம்) ஜீவசமாதி பெற்று அதாவது, மண்ணால் தின்ன முடியாத உடம்பைப் பெற்று மனதின்மீதும் மரணத்தின்மீதும் முழு ஆதிக்கம் பெற்றவனே சித்தன் ஆவான் என்றும் மிகத் துல்லியமாக விளக்கி எழுதப்பட்டுள்ளது. இறவா நிலையாகிய சாகாவரம் பெற்றவனே சித்தயோகி ஆவான் என்றும் விளக்கி எழுதப்பட்டுள்ளது. மேலும்,

**"மட்டையுரித்து நாரையெடுத்து**
**மருவோட்டை**
**பட்டென்றுடைத்துப் பருப்புடன்**
**இளநீர் பெறுமாபோல்.**
**சட்டை வெளுத்தும்**
**சகதி யெழுப்பித் – தணலாக்கி**
**துட்டமத்தின்**
**துள்ளலடக்கித் – துரியான்ம**
**நிட்டையிருத்திப்**
**பரசிவநேச - நெருப்பாகி**
**சுட்ட பசும்பொன்**
**சோதிதுலக்கிச் – சுடாசோம்**
**வட்ட நறுந்தேன்**
**வாரியருந்தும் – வரமீவாய்**
**எட்டு நிலைக்கும்**
**இன்பமளிக்கும் – பரமாத்மா"**

என்ற இப்பாடலில் சித்தர்களின் யோக ரகசியம் விளக்கப்பட்டுள்ளது. அந்தக்கரண சுத்தி எனும் உள்நிலைத் தூய்மை பெறுவதற்கு பேராசை, கோபம், வெறுப்பு, உயர்வு, தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் போன்ற காமக்குரோதாதிகளை தேங்காய்நார் உரித்து ஓட்டைப் பிளப்பதுபோல உரித்துக்களைந்து எறிய வேண்டும். உள்நிலைத் தூய்மையாகிய அந்தக்கரண சக்தியே சட்டை

வெளுத்தல், அதில் தியானித்தால் யோகக்கலை பிறக்கும். யோகக்கலை மனஇருளை அகற்றும். தேங்காயின் பருப்பு ஜீவாத்மா. இளநீர் பரமாத்மா. இளநீரின் தன்மையே தேங்காய்ப் பருப்பின் தன்மை . இளநீர் முழுமையும் பருப்பில் இறங்கிவிட்டால் பருப்பு கொப்பரை ஆகித்தனித்துப்பிரிகிறது. ஜீவன் பரமாத்ம சக்தியைப் பருகினால், பற்று நீங்கித் தானே தானாகிறது, இது அங்கலிங்க ஐக்கிய சக்தி எனப்படுகிறது .

**சாகாக்கல்வி :**

**முக்தி, மோட்சம், வீடுபேறு, விடுதலை, சாகாநிலை, இறந்தும் வாழும் கலை, இறவா நிலை, மீண்டும் பிறவா நிலை, ஜீவ ஐக்கியம்** என்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் கொடுத்தவர்கள்தான் சித்தர் பெருமக்கள். வேறு எந்த நாட்டில் பிறந்த மகான்களும் சாகாக் கல்வி பற்றிப் பேசவில்லை **இந்தியச் சித்தர்கலைதான் இந்தச் சாகாக்கல்வி. இதனை,**

**"முக்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது"**

என்று பாடி மண்ணுலக வாழ்விலும் விண்ணுலக வாழ்விலும் முக்தியை வித்தாக அளித்தவர்கள் சித்தர் பெருமக்கள்.

**"சாவா திருந்திடப் பால்கற"**

கல்லறைக்குச் சென்றால் கருவறை உறுதி. எனவே, கல்லறை என்ற சுடுகாட்டுக்குச் செல்லாமல் அதாவது சாகாமல் இருப்பதற்கான சாகாக்கல்வியை எழுதியவர்கள் சித்தர்கள். மனத்தின்மீதும் மரணத்தின்மீதும் ஆதிக்கம் செலுத்தியவர்கள் சித்தர்கள். இதனைத்

**"தேகாதிக் கெட்டாத சிற்சுக மெய்வாழ்வே**
**சாகாத சக்திக்கலை**
**பற்றற்று நின்ற பழம்பொருளைச் சிந்தித்து**
**உடம்பை முற்றும் அழியாத உடம்பாக்கியவர்கள் சித்தர்கள்"**

**"மறவா நினையா மவுனத் திருக்கில்**
**பிறவா ரிறவார் பினை"**

**- ஔவைக் குறள்.ஞானம் பிரியாமை.குறள்.8**

என்ற பாடலின் மூலம் நினைப்பும் மறப்பும் இல்லாத துரியமோன நிட்டையின்மூலம் மரணமில்லாத சமாதிநிலையை அடைய முடியுமெனக் காட்டியவர்கள் சித்தர்கள். மேலும்,

**"மறவாமற் காணும் வகையுணர் வாருக்**
**கிறவா திருக்கலு மாம்"**

**- ஔவைக் குறள்.மெய்யகம்.குறள்.9**

எந்நாளும் சிவசிந்தனையுடன் சிவனை மறக்காமல் நிற்பவர்கள் இறவாமை பெறமுடியும் என்று சொன்னவர்கள் சித்தர்கள் என்ற கருத்தினை மேற்காண் பாடல் வரிகளால் அறிய முடிகிறது. இதனுடன்,

**"சுத்தமோ டொன்றி மனமும் இறந்தக்கால்**
**முற்றும் அழியா துடம்பு"**

**மேலது.கண்ணாடி.குறள்.10**

இவ்வரிகளால் அறியப்பெறுவது யாதெனின், மனம் இறந்த நிலையாகிய மனோநாச நிலையில் சமாதியும் மண்ணால் அழியாத உடம்பும் கிட்டும் என்பதாம்.

**சித்தர்களின் சமுதாயப்பணி :**

சித்தர்கள் மனிதகுல மேன்மைக்காகவும் மாண்புக்காகவும் தங்கள் வாழ்நாளையும் உழைப்பையும் அர்ப்பணித்தவர்கள். **சோதிடம், வாழும்கலை, சித்த மருத்துவம், ரசமருத்துவம், யோகம். தியானம், பாஷாணங்கள், பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், ராஜயோகம்** என்று வகைப்படுத்தித் தங்கள் வாழ்வு முழுவதையும் சமுதாய நல்வாழ்வுக்காக அர்ப்பணித்தனர் . மேலும், இயற்கையோடு இணைந்த வாழ்வே இறைவனோடு இணைந்த வாழ்வென்பதையும் காட்டியுள்ளனர்.

**குண்டலினி சக்திக்கலை :**

இவ்வுலகில் உயிர் வாழும் உயிர்களின் இயக்கத்துக்கும், உயிரில்லாத சடப்பொருட்களின் இயக்கத்துக்கும் காரணமாக இருப்பது சக்தி. அந்த சக்தி மனிதருள் குண்டலினி மகாசக்தியாக இருக்கிறது. **ஜீவாதார சக்தியாகிய குண்டலினியை எழுப்பி உலகத்தையே நிர்வகிக்கப் பழக்குவதுதான் குண்டலினி யோகம்.** இக்கலையும் சித்தர்கலையேயாகும்.

**இதர சித்தர் கல்வி :**

**தொலைவில் உணர்தல், தொலைவில் உணர்த்தல், சோதிடம், வானியல், ஆழ்மன உறக்கம், அறிதுயில்** என்று சித்தர் கல்வி தொடர்கிறதைப் பார்க்கின்றபோது, சித்தர்களின் இறைப்பணி என்ற சமுதாயப் பணி நன்கு புலனாகுவதை அறியமுடிகிறது .

**"உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்"**

- **திருமந்.பா.725**

இவ்வுடம்பானது ஆன்மா உறையக் கூடிய ஆலயமாக இருக்கிறது. மேலும், மனிதப்பிறவி கிடைத்தால்தான் மோட்சநிலை அடைய முடியும் என்பதைக் காட்டி உடலோம்பல் கல்வியைக் கொடுத்து மோட்சத்திற்கான வாசலைத் திறந்தவர்கள் சித்தர்கள்.

**"ஊற்றைச் சடலமென்று எண்ணாதே"**

- **பட்டினத்தார்**

"உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்"

**- ஔவைக் குறள்.உடம்பின் பயன் .குறள்.10**

என்றெல்லாம் சித்தர்கள் பாடியுள்ளனர். இம்மனித தேகம் மிகவும் போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். காரணம் இத்தேகத்துக்குள்தான் அழியாத ஆன்மா உறைகிறது. இம்மனிததேகம் மூலம்தான் மோட்ச வீட்டை அடைந்து மீண்டும் பிறவா நிலையடைய முடியும் என்பதைத் தீர்க்கமாகத் தங்கள் பாடல்களில் சித்தர்கள் விளக்கி இருக்கிறார்கள். சந்திரனும் சூரியனும் மனிதப்பிறவி கிடைக்கவில்லையே என ஏங்கி இருக்கும்போது மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் சித்தர் பாடற் கருத்துக்களை உள்வாங்கி அதன் வழிநடக்கவேண்டும்

**யார் இந்தச் சித்தர்கள் ?**

**சித் என்றால் அறிவு, ஞானம், தெள்ளிய பார்வை, கூர்நோக்கு. விரிந்த நோக்கம்** என்று பொருள்படுவதால் சித்தர்களை அறிவாளிகள். ஞானிகள், தெளிந்த பார்வையுடையவர்கள், கூர்நோக்கிகள், கடந்து சிந்திப்பவர்கள் எனக் கொள்ளவது சிறப்பு. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கில் அகங்காரம் உருவெடுக்கும் முன்பாகவே விரிந்த மனத்தை சித்தத்திலேயே தெளிய வைத்த சித்தம் தெளிந்தவர்கள் சித்தர்கள். இந்தச் சித்தர்கள் மனித சமுதாயத்துக்குச் செய்து இருக்கும் தொண்டுகள் அளவிடற்கு அரியது **மருத்துவம், யோகம், கல்பம்** என்று பல துறைகளிலும் மனித சமுதாயம் இன்புற்று வாழ்வதற்காக தங்களை மலைகள் மற்றும் காடுகளில் ஐக்கியம் செய்து கொண்டு காடுகளில் கிடைத்த மூலிகைகளைப் பயன்படுத்தி மனித சமுதாயத்தின் நோய்களைப் போக்குவதற்குச் சித்த மருந்துக்களைக் கண்டறிந்து வைத்தனர் **மூலிகைகளில் இருந்து பொடி, ரசம், கல்பம் போன்றவற்றைப் பிரித்து எடுத்து மருந்துகளாகப் பயன்படுத்தினர் .**

உடலை யோகப் பயிற்சி மற்றும் பிராணாயாமப் பயிற்சிகளின் மூலம் நோயற்றதாக வைத்துக் கொள்ளவும் இவற்றினால் முடியாமல் வரும் நோய்களைக் களைவதற்கு மருந்துகளையும் கண்டறிந்தனர். இந்தச் சித்தர்கள் மக்கள் நலனுக்காக உழைத்தவர்கள். இன்றைய விஞ்ஞான ஆராயச்சிகளைச் சற்று உற்றுநோக்கினால் இதனுடைய ஆராய்ச்சிகள் **மனிதகுல மேம்பாடுகளைக் கருத்தில் கொள்ளாமல் ஹைட்ரஜன் அணுகுண்டுகளையும் கைக்குண்டுகளாகிய கிரினேடுகளையும் வெடிகுண்டுகளையும் கண்டுபிடிப்பதிலேயேதான் உள்ளது.** ஒவ்வொரு நாடும் தன் நாட்டின் பாதுகாப்பு என்கிற பெயரால் வேதியியல் பொருட்களைப் பயன்படுத்தி அழிக்கும் சக்தியை உருவாக்குவதற்கு அதிகப் பொருளைச் செலவிடுகின்றது. ஒரு நாட்டின் பலம் அதன் ராணுவ இருப்பு நிலையை வைத்து நிர்ணயிக்கப்படுவதால் தன் நாட்டின் ராணுவத்தைப் பலப்படுத்துவதிலும் டாங்கிகள், பீரங்கிகள், ஏவுகணைகள் என்று பலவற்றை வாங்குவதிலேயேயும் செலவிடுகின்றன. இதனாலும் ஒரு நாட்டினுடை ஆக்கப்பூர்வமான ஆராய்ச்சிகள் பாதிக்கப்படுகின்றன. நம் நாட்டுச் சித்தர்கள் மனிதகுல மேம்பாட்டுக்காகப் பெரிதும் உழைத்தவர்கள். மேலும் சித்தர்கள் சித்து

விளையாடியவர்கள் என்றே பெரும்பாலான மக்களுக்குத் தெரியும். ஆம், மனிதனுக்கு அப்பாற்பட்டவை என்று சொல்லப்படும் அணிமாதி சித்துக்கள் கைவரப்பெற்றவர்கள்தான் சித்தர்கள்.

**அணிமாதி அல்லது அட்டமாசித்திகள் :**

**அணிமா :**

**அணுவாகச் சுருங்கிக் கொள்ளுதல்.** இந்த வகை சித்து கைவரப் பெற்ற சித்தர்கள் தங்களைப் பிறர் அறியாமல் உலவுவார்கள் அதாவது அணுவாகத் தங்கள் உடம்பைச் சுருக்கி பிறர் அறியாவண்ணம் உலா வருவர். இவ்வணிமாசித்திக்கு உதாரணமாகப் பழனிபோகர் என்ற சித்தர் ஈ உருவம் எடுத்து திருஈங்கோய் மலை ஈசனைத் தரிசித்ததை அறியமுடிகிறது.

**மகிமா :**

**அண்டமாக விரிந்து கொள்ளுதல்.** இம்முறையில் தன் உடம்பை மலையளவாகவோ அல்லது அதற்கும் மேலாகவே விரிவடையச் செய்து கொள்வார்கள். தங்கள் உடலை மட்டும் அல்லாது புறத்தில் உள்ள பொருட்களையும் சிறியதாக அல்லது மிகப் பெரியதாக ஆக்கிக்காட்டும் வல்லமை படைத்தவர்கள் சித்தர்கள். மகிமா சித்திக்கு உதாரணமாக ஸ்ரீ அகத்திய சித்தர் விசுவரூபம் எடுத்ததையும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் விசுவரூப தரிசனத்தையும் அறியமுடிகிறது.

**லகிமா:**

**கனமான பொருளை இலகுவாகக் காட்டுதல்.** கொடுவிலார்பட்டி சித்தர், திருமதி இந்திராகாந்தி முன் வானில் பறந்தததை லகிமா சித்திக்கு உதாரணமாக இவண் கொள்ளப்படுகிறது.

**கரிமா:**

**இலகுவான பொருளை கனமாகக் காட்டுதல்.** கொல்லிமலைக் கைகட்டிச்சித்தர் தன் உடம்பைச் சுருக்கி சித்தர் களஞ்சியம் என்ற நூலின் நூலாசிரியார் யோகி கைலாஷ்நாத் அவர்களின் வலது கையில் உட்கார்ந்தது இதற்கு உதாரணம்.

**பிராப்தி:**

**தங்கு தடையின்றி எங்கும் சஞ்சரித்தல் ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் இருத்தல்.** வள்ளற் பெருமானின் பல இட இருப்பு இதற்குச் சிறந்த உதாரணம்.

**வசித்துவம்:**

**உலக உயிர்கள் யாவற்றையும் தன்வசப்படுத்தி அன்பு பாராட்டல்.** இதன் காரணமாகக் கொடூரமான வனவிலங்குகளாகிய சிங்கம், புலி போன்றவைகூட சித்தர்களுடன் இருக்கும். இதற்குப் புலிப்பாணி சித்தர், கோரக்கச்சித்தர், வியாக்ரபாதர் போன்ற சித்தர்கள் புலிகள் மேல் வலம் வந்ததையும் திபெத்தில் புலிகளுடன் பழகும் லாமாக்களுமே சிறந்த உதாரணம்.

**ஈசத்துவம்:**

**நெற்றிக்கண்ணை முழுமையாகத் திறப்பதன்மூலம் ஆதிசித்தனாகிய ஈசனின் முழுமையான அனுக்கிரகத்தைப் பெறுதல்.** ஸ்ரீபோகர் ஈசனின் அருள் பெற்று நவபாஷாண முருகன் சிலை அமைத்தது இதற்குச் சிறந்த உதாரணம்

**பிரகாமியம் :**

**கூடுவிட்டுக் கூடு பாய்தல்.** தன்னுடைய உடம்பில் உறையும் உயிரையும் ஆத்மனையும் எடுத்து வேறொரு உடம்பில் சொருகி விடுதல். இதற்கு உதாரணமாக திருமூலர் ஆடு மேய்க்கும் இடையனின் உடலில் புகுந்ததையும், ஆதிசங்கரர் மன்னர் ஒருவர் உடலில் புகுந்து சிற்றின்பம் துய்த்ததையும் கூறுவர். சத்குரு போகமுனிவரின் வான்வழிப் பயணமும் இதில் அடக்கம்.

மேற்கூறிய அணிமாதி சித்துக்களை தவிர **பிறர் மனதைப் படித்தல். பிறரைத் தன்வசப்படுத்தி இயங்கச் செய்தல், பிறரின் உருவ நினைவு அல்லது புகைப்படத்தை வைத்து அவர்களைச் செயல் இழக்க வைத்தல் அல்லது கொலை செய்தல்** இவையாவும் சித்துக்களே இந்த சித்துக்கள் தற்காலத்தில் **ஹிப்னாடிஸம், மெஸ்மெரிஸம், மனித வசியம்** என்ற பெயர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

**பதினெண் சித்தர்கள் :**

அருளியல் அனுபவத்தால் அட்டமா சித்திகளைக் கைவரப் பெற்ற சித்தர்கள் பதினெண்மர் . இதனை ,

**“பாரப்பா நவசித்தர் பதினெட்டாகி**
**பாருலகில் பதினெட்டுச் சித்தரானார்”**

**- அகத்திய முனிவரின் அமுதக் கலைஞானம் 221**

**“நந்தி, அகத்தியர்,மூலர், புண்ணாக்கீசர்,**
**நற்றவத்துப் புலத்தியர், பூனைக்கண்ணர்**
**கந்திடைக்காடர், போகர், புலிக்கையீசர்,**
**கருவூரார், கொங்கணர், காலாங்கி,**
**சிந்தி அழுகண்ணர், அகப்பேயர், பாம்பாட்டி,**
**தேரையர், குதம்பையர், சட்டைநாதர்**
**செந்தமிழ்சேர்சித்தர் பதினெண்மர் பாதம்**
**சிந்தையுன்னிச் சிரத்தணியாய்ச் சேர்த்து வாழ்வாம்”**

- **பழம்பாடல் திரட்டு**

மேற்சொன்ன பாடல்களின்படி ஆதிகாலத்திலே ஒன்பது சித்தர்கள் தான் இருந்தார்கள் பின்பு

பதினெட்டாகிவிட்டார்கள் என்பது அகத்தியரின் வாக்கு அதன்வழி நந்தீசர், அகத்தியர், திருமூலர், புண்ணாக்கீசர், புலத்தியர், பூனைக்கண்ணர், இடைக்காடர், போகர், வியாக்ரபாதர் என்ற புலிக்கால் முனிவர், கருவூரார், கொங்கணர், காலாங்கிநாதர், அழுசண்ணிச் சித்தர், அகப்பைச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், தேரையர், குதம்பையர், சட்டைநாதர் ஆகிய மேற்சொன்னவருள் புண்ணாக்கீசர், புலத்தியர், பூனைக்கண்ணர். புலிக்கையீசர் என்ற வியாக்ரமர் அகப்பைச் சித்தர், தேரையர் என்ற ஆறுபேரும் ஆதிசிவன் என்ற மூலசித்தரிடம் நேரிடையாகத் தீட்சை வாங்கியதற்கான ஆதாரங்கள் இல்லை. மற்றொரு பாடலில் ,

**தானென்ற திருமூலர், புண்ணாக்கீசர்**
**சட்டைமுனி, மச்சமுனி, புசுண்டரோடு**
**கோனென்ற கலைக்கோட்டுமுனி, வசிஷ்டர்**
**கும்பமுனி, கமலமுனி, இடைக்காட்டாரும்,**
**வானென்ற கொங்கணரும், விசுவாமித்திரர்,**
**வளர் அட்டகோணமுனி, சனகரொடு,**
**தேனென்ற சனத்குமாரர் முதலாயுள்ள**
**சிறந்த கோரக்கர் கருவூரார் தானே!**

**- சச்சிதானந்தர் சுழுமுனைச் சூத்திரம் 20. 21**

இந்தப் பாடற் பட்டியலின் படி 18 சித்தர்கள் முறையே திருமூலர், புண்ணாக்கீசர், சட்டைமுனி, மச்சமுனி, காகபுசண்டர், கலைக்கோட்டுமுனி, வசிட்டர், கும்பமுனி, கமலமுனி, இடைக்காட்டுசித்தர், கொங்கணர், விசுவாமித்திரர், அட்டகோணமுனி, சனகர், சனத்குமாரர், கோரக்கர், கருவூரார், போகர் ஆகியோராவர். இப்பட்டியலில் சிவபெருமான் என்ற மூல ஆதி குருசித்தரிடம் நேரடியாகத் தீட்சை வாங்காதவர்கள் புண்ணாக்கீசர், காகபுஜண்டர், கலைக்கோட்டுமுனி, விசுவாமித்திரர், அட்டகோணமுனி, சனகர், சனத்குமாரர் என்ற அறுவரும் எனத் தெரிகிறது. இவற்றின் வழி சித்தர்கள் பதினெண்மர் என்று அறிய முடிகிறது .

**முடிவுரை :**

இறையருள் பெற்ற பதினெண் சித்தர்களும் இல்லற வாழ்வில் இருக்கும் மனித சமுதாயதிற்கு இறையருள் பெற கூறிய வழிகளே சித்தர் இலக்கியங்களாக உள்ளன. தந்திரம், மந்திரம் மட்டுமில்லாமல் சமுதாய முன்னேற்றதிற்கு உந்துதலாக இருந்த சித்தர் வாழ்வியலும் சமுதாயத் தொண்டுகளும் இக்கட்டுரையின் வாயிலாக அறியப்பெற்றுள்ளன.

**துணைநூற்பட்டியல் :**

அகத்தியர்   - அமுதக்கலை ஞானம் 1200 ,

ஔவையார் - ஔவைக் குறள் ,

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

திருமூலர்   - திருமந்திரம், ஞா. மாணிக்கவாசகன் உரை ,

வா. ஜோதி உரை .